வேண்டும். அதுமட்டுமல்லாமல், அதிகமான ஒளிவிளக்குகளை அந்தப் பகுதிகளில் அமைத்தால், ஒளிவிளக்கு இருந்தால், இரவு நேரங்களில் சிறுத்தைகள் நடமாட்டம் இருக்காது. எனவே, நீங்கள் அவர்களிடத்தில் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல், அது விரும்பிச் சாப்பிடுகின்ற உணவான கோழியோ அல்லது மட்டனோ ஞாயிற்றுக்கிழமைகளிலே பயன்படுத்திவிட்டு வீட்டுக்கு அருகிலே போட்டுவிடுகின்றார்கள். அதன் காரணமாகவே, அதைச் சாப்பிடுகின்ற நோக்கத்தோடு சிறுத்தைகள் அங்கே வருகின்றன. அதையும் அவர்கள் தவிர்த்திட வேண்டும். அதைப்போலவே, கழிப்பிடங்கள் இல்லாத காரணத்தால், இரவு நேரங்களில் மக்கள் அந்தப் பகுதிகளிலே காட்டிலே ஒதுங்குகின்ற நேரத்தில் அது அடித்துக் கொன்று விடுகின்றது. எனவே, தற்காப்பு நடவடிக்கையாக, தனியார் தோட்டம் வைத்திருப்பவர்களிடம் கழிப்பிடங்கள் கட்ட வேண்டும்; நல்ல ஒளி விளக்குகளை அமைத்துத் தர வேண்டும்; அதில் இருக்கின்ற அந்தப் புதர்களையெல்லாம் அகற்ற வேண்டுமென்று நீங்கள் அறிவுரை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சொன்னதைப்போல, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் பக்கத்திலேயே ஒரு கூண்டு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூண்டிலே சிறுத்தைகளைப் பிடிப்பதற்காக நாய்களைக் கட்டினால், இயற்கை ஆர்வலர்கள் எல்லாம், நாய்களை நீங்கள் எப்படி பயன்படுத்தலாமென்று அதிலும் தகராறு செய்கிறார்கள். இப்படிப் பல்வேறு சூழ்நிலைகள் இருக்கிற காரணத்தால், நாங்கள் தொடர்ந்து கண்காணிப்போமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், தோனிமுடி எஸ்டேட் பகுதியில், பாட்டனார் வீட்டிலே தங்கி, பால்வாடி வகுப்பிலே பயின்று வந்த திரு. பாபுகுமார் என்பவருடைய 5 வயது மகன் முகேஸ்வரன் மற்றும் அதே எஸ்டேட்டில் திரு. காந்தி என்பவருடைய மகன் மணிசங்கர் ஆகிய இருவரும் சிறுத்தைப் புலியின் பசிக்கு இரையாகி, வேட்டையாடப்பட்டு இறந்துவிட்ட செய்தியை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோவை தங்கம் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகிய இருவரும் கவன ஈர்ப்பாகத் தந்திருக்கின்றார்கள்.

2010 ஏப்ரல் 30] *[கலைஞர் மு. கருணாநிதி]*

இதுபற்றி நானும் விவரங்கள் சேகரித்திருக்கிறேன். வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல—அந்தக் குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்.

இந்த உருக்கமான சம்பவம், கொடுமையான சம்பவம் தொடர்ந்து நடக்காமல் இருப்பதற்கும், எச்சரிப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிப்பதோடு; கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையைக் கேட்டிருக்கின்றேன்; அந்த அறிக்கையைப் பெற்று, அந்தச் சிறுவர்களுடைய குடும்பம் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு இலட்சம் வீதம் மொத்தம் இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. *(குறுக்கீடு)* நன்றி சொல்கிறீர்களா? திரு. கோவை தங்கம். *(குறுக்கீடு)*

திரு. கோவை தங்கம்: ஆமாம், அப்படித்தான் சொல்வேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தேவையில்லாதது திரு. கோவை தங்கம், நீங்கள் நன்றி சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், 2006–லே ரம்யா என்கிற ஒரு குழந்தையை வில்லோனியில் சிறுத்தை அடித்துக் கொன்றது. உடனே, மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களிடமும் நான் அந்த போட்டோவைக் கொண்டு வந்து காட்டியபோது, மனம் வேதனை அடைந்து, வால்பாறையில் மக்களுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய்க்குப் பதிலாக 10 லிட்டர் மண்ணெண்ணெயை வழங்கினார்கள். தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 1,000 தெரு விளக்குகளுக்கு முதலில் அனுமதி கொடுத்தார்கள். அதனால்தான் இப்போது அங்கே சிறுத்தைப் புலி, யானைகளால் இறப்புகள் கொஞ்சம் குறைந்திருக்கின்றது. நான் சென்ற வாரம்கூட